## 42. அமர்நீதி நாயனார் கதை

சோழவள நாட்டிலே பழையாறை என்னும் ஊரிலே வைசியர்குலத்திலே அமர்நீதி நாயனார் தோன்றினார். இவர் மிகுந்த செல்வம் உடையவர். சிவனடியார்கட்குக் கோவணம்ஆடை முதலியன வழங்குவதோடு அவர்கட்கு உணவும் இடுபவர். இவர் திருநல்லூர் என்னுஞ் சிவப்பதியில் திருமடம் ஒன்று



அமைத்துக்கொண்டு அதில் தங்கித் திருவிழாக்காணவரும் அடியார்கட்கு உணவளிக்கும் திருப்பணியை மேற்கொண்டிருந்தார். ஒருநாள் சிவபெருமான் மணமாகாத ஓர் அந்தணன் போல் இவருடைய திருமடத்திற்கு எழுந்தருளினார். அவருடைய கையில் ஒரு தடியிருந்தது. அதில் இரண்டு கோவ ணங்களும் ஒருதிருநீற்றுப்பையுங் கட்டப்பட்டிருந்தன. அமர்நீதி நாயனார் அவ்வந்தணரைக் கண்டுமகிழ்ந்து போற்றினார். தம்முடையதிருமடத்தில் உணவுகொள்ளுமாறுவேண்டிக் கொண்டார். அந்தணக் கோலத்துடன் வந்தகடவுள் அதற்கு உடன்பட்டார். "நான் காவிரிக்குப் போய் நீராடி வருகிறேன். இக்கோவணத்தை வைத்திருந்து நான் வந்த வுடன் கொடும்" என்று கூறித் தம்முடைய தடியில் இருந்த. கோவணம் ஒன்றை அவிழ்த்துக்கொடுத்துவிட்டுச் சென்றார். கொடுக்கப்பட்ட கோவணம் மறையுமாறு செய்துவிட்டுத் தாம் மழையில் நனைந்துகொண்டு வந்து தாங்கொடுத்த. கோவணத்தைக் கேட்டார். அமர்நீதி நாயனார் கோவணத்தைத் தேடிப்பார்த்தார். கண்டுபிடிக்க முடியவில்லை. வேறொரு கோவணத்தை யெடுத்துக்கொண்டு அந்தணக் கோலக்கடவுள் முன்வந்தார், "தாங்கள் தந்த கோவணம் காணப் படவில்லை. அஃது எவ்வாறோ மறைந்து போய்விட்டது. இக்கோவணத்தை அணிந்துகொள்ளுங்கள்" என்று சொன்னார். | நாயனார் நவின்றதைக் கேட்டுக் கடவுள்சினங்கொண் டார் போல் நடித்தார். "நீர் சிவனடியார்கட்கு ஆடை கோவணம் முதலியன தருவதாகச் சொல்லிஅவர்களுடைய கோவணம் முதலியவைகளைக் கவர்ந்து கொள்ளும் தொழிலை மேற்கொண்டிருக்கிறீர்" என்றுசொன்னார். பிறகு தம்முடைய தண்டில் உள்ள கோவணத்திற்கு ஒத்த எடையுள்ள கோவணம்

தருமாறுகேட்டார். நாயனார் எவ்வளவோ கோவணங்களையும் துணிமணிகளையும் நிறைகோலில் இட்டும் இறைவனுடைய கோவணமே மேலெழுந்து நின்றது. பிறகு நாயனார் பிறபொருளையும் இட்டார். தாமும்மனைவி' மக்களோடு நிறைகோவில் ஏறினார். அப்பொழுது தான் நிறைகோல் சரியாக நின்றது. இறைவன் நாயனாருக்குச் காட்சியளித்தார். நாயனார் நிறைகோலே தேவவிமான மாக மேலெழும்பத் தேவருலகஞ்சென்றார். கோவணம் நேர்தனை நிறுத்துக் கொடுத்தும்.

(நால்வர் நான்மணிமாலை)

(திருத்தொண்டு)